

தமிழ்நாடு அரசின் தலைமை காஜி சலாவுதீன் முகமது அயூப் சாகிபு அவர்கள் மறைவெய்தியதையொட்டி, அவர்களின் இல்லத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (25.5.2025) நேரில் சென்று அஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ், சென்னை மேற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் எஸ்.எச்.ரஹ்மத்துல்லா ஆகியோர் உடனிருந்தனர்.

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை!

# காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்-ஆர்.காந்தி சிறப்புரை!

சென்னை, மே.26,

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 28.5.2025 புதன்கிழமை மாலை 4 மணிக்கு, அருணா மஹால், காஞ்சிபுரத்தில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார். காஞ்சிபுரம் மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், பகுதிச் செயலாளர் கே.திலகர் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பி.எம்.குமார், வாலாஜாபாத் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பி.எம்.குமார், 2 வது பகுதிச் செயலாளர் எஸ்.சந்துரு, 3 வது பகுதிச் செயலாளர் அ.தசரதன், 4 வது பகுதிச் செயலாளர் சு.வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் மாண்டலப் பொறுப்பாளர், அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், காஞ்சிபுரம் பொறுப்பு அமைச்சர் ஆர்.காந்தி ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இக் கூட்டத்தில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., தொகுதி பார்வையாளர் ஜெ.ராமகிருஷ்ணன், மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், சன்பிராண்ட் கே.ஆறுமுகம், எம்.எஸ். சுகுமார், ஜி.சுகுமாரன், தி. அன்பழகன், பெ.சுந்தரவரதன், வி.எஸ்.ராமகிருஷ்ணன், எஸ்.கே.பி. சீனிவாசன், எஸ்.சிகாமணி, மலர்கொடி குமார், ஆர்.கே. தேவேந்திரன், நித்யா சுகுமார், சசிகலா கணேஷ், எஸ்.மோகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்ற னர்.

எனவே இக் கூட்டத்தில் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், பேரூர்க் கழக நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நிறைவாக இளைஞர் அணி அமைப்பாளர் அ.யுவராஜ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.அருள் முருகன் நன்றி கூறுகிறார்.

## மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ் பங்கேற்பு!

# அண்ணாநகர் 101 வது வட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் அறிக்கை!

சென்னை, மே. 26

அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. ஆலோசனைப்படி, இன்று (26.05.2025 திங்கட் கிழமை) மாலை 6 மணிக்கு, எண். 13/38, திருவள்ளுவர் நகர், அண்ணாநகர் கிழக்கில் நடைபெறுகிறது.

101 வது வட்டக் கழக அவைத் தலைவர் எஸ்.முரளிகிருஷ்ணன் தலைமை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட துணைச் செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டத்திற்கு உட்பட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டச் செயற்குழு உறுப்பினர்கள், சார்பு மன்ற நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

ஜூன் 3 அன்று முத்தமிழ் அறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்தும்

இவ்வாறு 101 வது வட்டக் கழகச் செயலாளர் க. கோவிந்தராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பாக ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.எஸ்.மணிகண்டன் ஏற்பாட்டில் சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அறிவுறுத்தலின்படி சோழவரம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் மீ.வே.கர்ணாகரன் ஆலோசனைப்படி தொடர்ந்து 6வது வாரமாக கோடை வெப்பத்தை தணிக்கும் வகையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திருவெற்றியூர் ஆர்.டி.மதன்குமார் அவர்கள் தலைமையேற்று பொதுமக்களுக்கு நீர்மோர்,ரோஸ்மில்க்,இளநீர்,தர்பூசணி,வாழைப்பழம்,குடை போன்றவற்றை வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆதிதிராவிட நலதுணை அமைப்பாளர் மு.சீனிவாசன் புழல் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் செ.யுவராஜ் திருவெற்றியூர் மத்திய பகுதி இளைஞரணி அமைப்பாளர் மணலி எஸ்.ஸ்டாலின் திருவெற்றியூர் மேற்கு பகுதி துணை அமைப்பாளர் கே.முனுசாமி, எம்.மனோஜ், எஸ்.சதிஷ்குமார் புழல் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.ஐயப்பன் சோழவரம் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் அலமாதி ரூபேஷ் கிளைகழக நிர்வாகி எம்.சோமசுந்தரம் இளைஞரணி நிர்வாகிகள் தமிழரசன், கார்த்திக்ராஜா, நித்தியானந்தம், ஹரிஷ்,விக்கி, ஹரி, லோகேஷ், சூர்யா, ஜெகன், கவின், கோகுல், டேவிட், தமிம் அன்சாரி, சந்தோஷ், கலந்துகொண்டனர்.

## குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழு முன்னாள் தலைவர் –

# அமைச்சர் தா.மோ.அன்பரசனின் தந்தை த.மோகலிங்கம் 13 ஆம் ஆண்டு நினைவு நாள்!

## குன்றத்தூரில் கழகத்தினர் நாளை மலரஞ்சலி!

காஞ்சிபுரம், மே 26 -

குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவரும் அமைச்சர் தா.மோ.அன்பரசனின் தந்தையுமான தா. மோகலிங்கம் அவர்களின் 13 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி, குன்றத்தூரில் நாளை கழகத்தினர் திரண்டு வந்து அவரது திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்துகின்றனர்.

குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவரும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசனின் தந்தையுமான தா. மோகலிங்கம் அவர்களின் 13 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி, நாளை (27 ஆம் தேதி) காலை 10.00 மணியளவில் குன்றத்தூர் செங்குந்தர் திருமண மண்டபத்தில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட குன்றத்தூரில் கழகத்தை வளர்த்த தீரர் தா.மோகலிங்கம் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் திரண்டு வந்து மலர் அஞ்சலி செலுத்துகின்றனர்.

## ஒன்றிய அரசு – தமிழ்நாட்டிற்கு உரிய

# நிதியை உடனடியாக ஒதுக்க வேண்டும் என்பதே நடுநிலையாளர்களின் எதிர்பார்ப்பு!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, மே 26-

ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு உரிய நிதியை உடனே ஒதுக்க வேண்டும் என்பதே நடுநிலையாளர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து 25.05.2025 தேதிய தினகரன் நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-



தினகரன்

மே 25, 2025 ஞாயிற்றுக்கிழமை

இதுவே எதிர்பார்ப்பு

நேஷனல் இன்ஸ்டிட்யூஷன் பார் டிரான்ஸ் பார்மிங் இந்தியா' என்பதன் சுருக்கமே 'நிதிஆயோக்' என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவை உருமாற்றம் செய்வதற்கான தேசிய நிறுவனம் என்றும் இதனை கூறலாம். திட்டக்குழுவுக்கு பதிலாக இந்த நிறுவனத்தை உருவாக்கும் முடிவை 2014ம்ஆண்டு ஒன்றிய அரசு எடுத்தது. 2015ம் ஆண்டு ஜனவரி 1ம்தேதி, அமைச்சரவைக் குழுவின் தீர்மானத்தின் மூலமாக நிதி ஆயோக் அமைக்கப்பட்டது.

இந்த குழுவின் தலைவராக பிரதமர் செயல்படுகிறார். இதுதவிர துணைத் தலைவர் மற்றும் 5நிரந்தர உறுப்பினர்கள் செயல்பட்டு வருகின்றனர். மேலும் நிதி ஆயோக் கவுன்சிலில் அனைத்து மாநில முதல்வர்கள், யூனியன் பிரதேசங்களின்

நேஷனல் இன்ஸ்டிட்யூஷன் பார் டிரான்ஸ் பார்மிங் இந்தியா’ என்பதன் சுருக்கமே ‘நிதிஆயோக்’ என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவை உருமாற்றம் செய்வதற்கான தேசிய நிறுவனம் என்றும் இதனை கூறலாம். திட்டக்குழு வுக்கு பதிலாக இந்த நிறுவனத்தை உருவாக்கும் முடிவை 2014ம் ஆண்டு ஒன்றியஅரசு எடுத்தது. 2015ம் ஆண்டு ஜனவரி 1ம்தேதி, அமைச்சரவைக் குழுவின் தீர்மானத் தின் மூலமாக நிதி ஆயோக் அமைக்கப் பட்டது.

இந்த குழுவின் தலைவராக பிரதமர் செயல்ப டுகிறார். இதுதவிர துணைத் தலைவர் மற்றும் 5நிரந்தர உறுப்பினர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

மேலும் நிதி ஆயோக் கவுன்சிலில் அனைத்து மாநில முதல்வர்கள், யூனியன் பிரதேசங்களின் துணைநிலை ஆளுநர்கள் மற்றும் பல்வேறு மத்திய அமைச்சர்கள் இடம் பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டு ஜூலையில் டெல்லியில் இந்த கூட்டம் நடத்தப்பட்டது. ஆனால், மத்திய பட்ஜெட் டில் ஆந்திரா, பீகார் ஆகிய மாநிலங்களை தவிர வேறு மாநிலங்களுக்கும் நிதி ஒதுக்கவில்லை என்று குற்றம்சாட்டி, தமிழகம், கர்நாடகா, தெலங்கானா, இமாச்சலப் பிரதேசம், கேரளா, பஞ்சாப் ஆகிய மாநிலங்கள், டெல்லி, புதுச்சேரி யூனியன் பிரதே சங்களின் முதல்வர்கள் அந்த நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை. இந்தநிலையில் இந்தியாவின் 10வது நிதி ஆயோக் கூட்டம் பிரதமர் மோடி தலைமையில் டெல்லியில் நேற்று நடந்தது. நேற்றைய நிதிஆயோக் கூட்டத்திலும் கர்நாடகம், மேற்குவங்கம், கேரள மாநிலங்களின் முதல்வர்கள் பங்கேற்கவில்லை. அதேநேரத்தில் தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் கூட்டத்தில் பங்கேற்றது ஒட்டுமொத்த இந்தியாவின் கவனத்தையும் ஈர்த்தது.

தமிழகத்திற்கான நிதியை வழங்காமல் ஒன்றிய அரசு தொடர்ந்து புறக்கணித்து வருகிறது. நூறுநாள் வேலை திட்ட நிதி, கல்விநிதி, புயல் வெள்ள நிவாரண நிதி, பல்வேறு திட்டப்பணிகளுக்கான நிதி என்று ரூ.2.63லட்சம் கோடி நிதி வழங்கப்படாமல் உள்ளது. அதேபோல பல்வேறு திட்டங்களுக்கும் நிதி ஒதுக் குவதில்லை. ஒன்றிய அரசின் அதிகாரிகள் ஆய்வு செய்து அறிக்கை அளித்த பிறகும் நிதி ஒதுக்காமல் இருப்பது தமிழகத்தை வஞ்சிக்கும் செயல் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட முக்கிய தலை வர்கள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் தான் தமிழகத்தின் நிதி உரிமைக்காக டெல்லி செல்கிறேன் என்று வெளிப்ப டையாக அறிவித்து, இந்த கூட்டத்தில் பங்கேற்றார். அதை ஆணித்தரமாக கூட்டத்தில் எடுத்துரைத்தார். 15வது நிதிக்குழு மாநிலங்களுக்கு பரிந்துரைத்த 41சதவீத வரியை ஒன்றிய அரசு வழங்குவதில்லை.

இதனால் திட்டங்களை செயல்படுத்துவதில் பெரும் நிதிச்சுமை ஏற்படுகிறது. எனவே உடனடியாக நிதியை வழங்கவேண்டும் என்றார். கல்வி நிதி ஒதுக்கப்படாத பின்னணி குறித்தும் வெளிச்சம் போட்டு காட்டினார்.

இது மட்டுமன்றி அனைத்து மாநிலங்களுக்கும் வரிவருவாயில் 50 சதவீதத்தை வழங்கவேண்டும் என்ற அவரது கோரிக்கையும் தலைவர்களிடம் பெரும் வரவேற்பை பெற்றது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய நிதிஆயோக் கூட்டத்தின் கருப்பொருள் ‘விக்சித்பாரத்-2047’ என்பதாகும். அதாவது மாநி லங்களின் வளர்ச்சி மற்றும் 2047ம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக உருவாக்குவதே இந்த கருப்பொருளின் இலக்கு. பிறமாநிலங்களோடு ஒப்பிடுகையில் அனைத்து துறைகளிலும் முத்திரை பதித்து, அதற்கான ஆயத்தப் பணிகளில் முன்னணியில் இருப்பது தமிழ்நாடு.

எனவே இனிமேலாவது இதை கருத்தில் கொண்டு ஒன்றிய அரசு செயல்பட வேண்டும். புறந்தள்ளினாலும் தனித்துவத்துடன் தலை நிமிர்ந்து நிற்கும் தமிழ்நாட்டுக்கு உரிய நிதியை உடனடியாக ஒதுக்கவேண்டும் என்பதே நடுநிலையாளர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இவ்வாறு ‘தினகரன்’ நாளேடு கூறியுள்ளது..

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தூத்துக்குடி என். பெரியசாமி
### மே 26 (2017)



ஒன்றுபட்ட நெல்லை மாவட்டத்தில் 1960ஆம் ஆண்டு முதல் கழக உறுப்பினராக பதிவு செய்து கொண்ட இவர், தொடர்ந்து தூத்துக்குடி நகருக்கு உட்பட்ட வட்டக் கழகப் பிரதிநிதியாக பொறுப்பு வகித்து, பின்னர் மாவட்டக் கழக பிரதிநிதியாக 1977ஆம் ஆண்டு பொறுப்பேற்றார். அதனைத் தொடர்ந்து 1982 முதல் 1987 வரை தலைமைப் பொதுக்குழு உறுப்பினராகவும், அதன்பின்னர், தூத்துக்குடி மாவட்டக் கழகச் செயலாளராக 1987 முதல்.தொடர்ந்து தனது இறுதி காலம் வரை தலைவர் கலைஞர் அவர்களின் தடம் மாறாத தொண்டராகப் கழகப் பணியாற்றியவர். கழகப் பணிகளோடு, தொழிலாளர் நலனினும் அதிக அக்கறை கொண்ட இவர் தூத்துக்குடி மாவட்டத்தில் 36 தொழிற் சங்கங்களில் தலைவராக இருந்தவர்.

தூத்துக்குடி நகர்மன்றத் தலைவராகவும் – 1989,1996 ஆண்டுகளில் நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்று, இரு முறை சட்டப்பேரவை உறுப்பினராகப் பணியாற்றினார்.

1993ஆம் ஆண்டு கழகத்திற்கு சோதனை வந்த காலத்தில், தூத்துக்குடி மாவட்டத்தை கழகக் கோட்டையாக காத்து நின்றவர். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தின்கீழ் ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைவர் கலைஞர் மேல் கொண்ட அளவு கடந்த பற்றின் காரணமாக, தலைவர் கலைஞர் அவர்களே, இவரை “என்னுடைய முரட்டு பக்தன்” என்று மனமாரப் பாராட்டியவர். 2016ல் தலைமைக் கழகத்தின் சார்பில் வழங்கப்படும் கலைஞர் விருதினை தலைவர் கலைஞர் அவர்களால் பெற்றவர். “என் மீது தனிப்பட்ட பாசத்தையும் வைத்திருந்தவர் அண்ணன் தூத்துக்குடி பெரியசாமி அவர்கள் என்பதை நினைக்கும் போது, பெருமைமிக்க தொண்டரை இழந்த சோகம் எங்களை உலுக்கிக் கொண்டிருக்கிறது.” என்று கழகச் செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மெட்டல் பாக்ஸ் மு.நடராசன்
### மே 26 (2003)



கழகம் துவக்கிய காலத்திலேயே உறுப்பினராகி, தமது பகுதியில் மன்றத்தை துவக்கி கழகப் பணியாற்றியவர்.

இராயபுரம் பகுதி பிரதிநிதி, பகுதி அவைத் தலைவர் மற்றும் இராதாகிருஷ்ணன் நகர் பகுதி துணைச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

மெட்டல் பாக்ஸ் தொழிற்சாலையில் தொ.மு.ச. அமைப்பை உருவாக்கி அதன் பொதுச்செயலாளராகவும், மாவட்ட கவுன்சில் பொதுச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து தொழிலாளர் முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.